ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2495/22 - 2026 ජූලි මස 03 වැනි සිකුරාදා - 2026.07.03

*2495/22 ஆம் இலக்கம் - 2026 ஆம் ஆண்டு யூலை மாதம் 03 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV(ஆ) - உள்ளூராட்சி

## உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள்

**(262 ஆம் அத்தியாயம்) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 66அ(1)(அ) என்னும் பிரிவின் கீழ் கரைதுறைப்பற்று பிரதேச சபை உறுப்பினர் ஒருவரின் பதவியிலான வெற்றிடத்தை நிரப்புதல்**

கரைதுறைப்பற்று பிரதேச சபை உறுப்பினர் ஒருவரின் பதவி கட்சியின் உறுப்பினராக உள்ளமை இல்லாதொழிந்துள்ளதன் காரணமாக வெற்றிடமாயிருக்கின்றதாதலாலும்,

மேற்குறித்த கட்டளைச் சட்டத்தின் 66அ(1)(அ) ஆம் பிரிவின் கீழ், கரைதுறைப்பற்று பிரதேச சபையின் இலக்கம் 06 முள்ளியவளை கிழக்கு வட்டாரத்திற்கு தெரிவு செய்யப்பட்ட திரு. சின்னராசா லோகேஸ்வரன் என்பவர் அங்கம் வகிக்கின்ற இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி என்ற அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் செயலாளர் முப்பது (30) நாட் காலக்கெடுவுக்குள் உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின்(262 ஆம் அத்தியாயம்) 9 ஆம் பிரிவின் கீழ் தகைமையுடைய வேட்பாளரொருவராக, உறுப்பினரொருவராக தேர்ந்தெடுக்கப்பட்டவரென வெளிப்படுத்தப்பட வேண்டியவரும் அக்கட்சியை சேர்ந்தவருமான கரைதுறைப்பற்று பிரதேச சபையின் இலக்கம் 06 முள்ளியவளை கிழக்கு வட்டாரத்தின் உறுப்பினர் தொடர்பாக தீர்மானிக்குமாறு என்னால் பணிக்கப்பட்டுள்ளாராதலாலும்,

மேலே கூறப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் செயலாளரினால் அவ்வெற்றிடத்தை நிரப்புவதற்காக திரு. கிட்டிணபிள்ளை சிவகுரு என்பவரைப் பெயர்குறித்து நியமிக்கும் தமது முடிவினை அறிவித்துள்ளராதலாலும்,

கரைதுறைப்பற்று பிரதேச சபையின் தெரிவத்தாட்சி அலுவலர் சிந்துசா சசிக்குமார் ஆகிய நான், உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் (262 ஆம் அத்தியாயமான) 66அ(1)(அ) என்னும் பிரிவின் நியதிகளின் படி செயற்பட்டு திரு. கிட்டிணபிள்ளை சிவகுரு என்பவர் கரைதுறைப்பற்று பிரதேச சபையின் இலக்கம் 06 முள்ளியவளை கிழக்கு வட்டாரத்திற்கு உறுப்பினர் ஒருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

**சிந்துசா சசிக்குமார்**
**தெரிவத்தாட்சி அலுவலர்**
**கரைதுறைப்பற்று பிரதேச சபை**

**மாவட்டத் தேர்தல்கள் அலுவலகம்,**
**முல்லைத்தீவு.**
**2026, யூலை 02.**

EOG 07 - 0035


இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

*இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*